**TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN**
19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
hone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 60 /2017**

திரு. கா. மாசானம்,
த/பெ கருப்பையா,
101, மெயின் ரோடு,
திருப்பாச்சேத்தி,
திருப்புவனம் தாலுகா,
சிவகங்கை மாவட்டம். . . . . . மேல்முறையீட்டாளர்
(திரு. கா. மாசானம்)

எதிர்

1) செயற் பொறியாளர்/பகிர்மானம்/மானாமதுரை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
மானாமதுரை – 630 606.

2) உதவி செயற் பொறியாளர்/பகிர்மானம்/மானாமதுரை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
மானாமதுரை – 630 606.

3) உதவி பொறியாளர்/பகிர்மானம்,
திருப்பாசேத்தி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருப்பாசேத்தி–630 610. . . . எதிர்மனுதாரர்
(திரு. J. பிரேம்குமார், செயற்பொறியாளர்/பகிர்மானம்/மானாமதுரை &
திருமதி. S. ஷர்மிளா தேவி, உதவி பொறியாளர்/திருப்பாச்சேத்தி)

**<u>கேட்புரை நாள் : 21–11–2017</u>**
**<u>ஆணை நாள் : 03.05.2018</u>**

திரு. கா. மாசானம், த/பெ கருப்பையா, திருப்பாச்சேத்தி, திருப்புவனம் தாலுகா, சிவகங்கை மாவட்டம் அவர்களின் 28.9.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.60/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 21.11.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

சிவகங்கை மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் பிறப்பித்த ஆணையை ரத்து செய்து மேல்முறையீட்டாளர் அளித்துள்ள விண்ணப்பத்தை ஏற்று அவருக்கு இலவச மின் இணைப்பு கொடுக்க உத்தரவிட வேண்டுகிறார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் தனக்கு பாத்தியமான புல எண் 154/4A ல் உள்ள கிணற்றிற்கு மின்னிணைப்பு வேண்டி கடந்த 13.10.1998ல் விண்ணப்பம் செய்துள்ளார். அதுவும் முறையாக அலுவலகத்தில் பதியப்பட்டு நிலுவையிலிருந்து வந்தது. அதன் பின்னீடு சர்வே எண். 154/4Aல் உள்ள கிணற்றில் போதிய நீர் வளம் இல்லை என தெரிவித்து 154/5ல் ஒரு போர் கிணறு அமைத்து சர்வே எண் மாற்றம் பெற்று உதவி மின்பொறியாளர்/ பகிர்மானம்/திருப்பாச்சேத்தி அலுவலகத்தில் 17.8.2012 அன்று தயார் நிலை பதிவு செய்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளர் சர்வே எண்.154/4Aல் உள்ள மற்றொரு கிணறில் மின்இணைப்பு எண்.169 என்ற எண்ணுடன் உள்ளது என்பதை தெரிவிக்காமல் மறைத்து விட்டதாக தெரிவித்து எதிர்மனுதாரர்கள் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை ரத்து செய்துவிட்டனர்.

2.3 எனவே மேல்முறையீட்டாளர் அவருடைய விண்ணப்பத்தை ஏற்று இலவச மின்னிணைப்பு வழங்க கோரி சிவகங்கை மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு

செய்துள்ளார். மன்றம் **14.09.2017** நாளிட்ட ஆணையில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்க இயலாது என்று தீர்வு செய்துள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறை தீர்ப்பாளரின் முன்பு சமர்பித்துள்ளார்.

**3. <u>மன்றத்தின் தீர்வு</u>**

3.1 சிவகங்கை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை **14.9.2017** நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>முடிவுரை</u>*

*மேற்கண்டவற்றிலிருந்து மனுதாரரின் மனு மற்றும் எதிர் மனுதாரர்களின் வாதுரை எழுத்து மூலமான பதிலுரைகள் மற்றும் கேட்புரையின் போது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் இவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.*

*மனுதாரரின் மேற்படி விவசாய விண்ணப்பத்திற்கு சர்வே மாற்றம் செய்து புதிய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கோருவது ஏற்புடையதா ?*

*<u>வழக்கெழு வினாவின் தீர்வு</u>*

1. *தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின்* Lr.No.SE/RE/&(D)/ EE/ RE/A1/ F.Doc /D.986/11, Dt.*22.07.2011* *அறிவிப்பின்படி ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரு விவசாய மின் இணைப்பிற்கு மேல் வழங்காமல் இருப்பதற்காக விண்ணப்பதாரரிடம் வேறு விண்ணப்பம் எதுவும் மின்இணைப்பு கோரிய கிணற்றிற்கு முன்னர் சமர்ப்பித்து நிலுவையில் இல்லை என்றும், மின்இணைப்பு எதுவும் விண்ணப்பதாரரின் பெயரில் மேற்கண்ட கிணற்றில் இல்லை என்றும் அவ்வாறு உள்ளது என்று அறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் ஒரு உறுதிப்பத்திரம் விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*
2. *ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரே புல எண்ணில் விவசாய மின்இணைப்புகள் வழங்குவதில் வாரிய ஆணை* Lr.No.SE/RE/&(D)/ EE/ RE/A1/ F.Doc/D.1472/10, Dt.*23.10.2010* *ல்* NABARD guide lines *ன்படி ஒரு கிணற்றிற்கும் மற்றொரு கிணறு அல்லது ஆழ்துளை கிணறு ஆகியவற்றிற்கு இடையே உள்ள இடைவெளி* (distance) *குறித்து தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

3. புல எண் மாற்றம் செயற் பொறியாளரின் அனுமதியுடன் மின்பளுவில் மாற்றம் இல்லாமல் புல எண் மாற்றம் செய்து கொள்ளலாம் என்று உரிய ஆணைகள் உள்ளது. எனவே அதன்படி புல எண் மாற்றம் செய்யும் போது கள ஆய்வில் சம்பந்தப்பட்ட இடம் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று தெரிகிறது.

4. ஆனால், அன்றைய நிலையில் இருந்த கள அலுவலர்களால் மேற்படி புல எண் மாற்றம் வாரிய விதிமுறையின்படி மேற்கொண்டிருக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் அன்றே மேற்படி புல எண்ணில் விவசாய மின்இணைப்பு உள்ள விபரம் தெரிந்து மனுதாரரிடம் தெரிவிக்கப்பட்டு இருக்கும். எனவே மேற்படி புல எண் மாற்றம் வாரிய விதிமுறைகளின்படி அன்றைய நிலையில் இருந்த எதிர்மனுதாரர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் தங்களது கடமையை முறையாக செய்யவில்லை என்றும் இம்மன்றம் கருதுகிறது.

5. ஆனால், மனுதாரர் மேற்படி புல எண்ணில் ஏற்கனவே ஒரு கிணறு உள்ளது என்பதை விண்ணப்பம் பதிவு செய்யும்போதும் தெரிவிக்கவில்லை. மேலும், தயார் நிலை பதிவு செய்ய கால அவகாசம் பெறப்படும் போதும் தெரிவிக்கப்படவில்லை. அதன் பின்பு மீண்டும் புல எண் மாற்றம் செய்யும் போதும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மேற்கண்ட செயல்பாடு சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

6. மனுதாரரின் மேற்படி கோரிக்கையினை பரிசீலிக்கும் போது ஏற்கனவே விவசாய மின்இணைப்பு பெற்றுள்ள புலஎண் 154/4Aல் உள்ள வட்ட கிணற்றிற்கும், அதே புல எண்ணில் உள்ள மற்றொரு கிணற்றிற்கும் இடைவெளி தூரம் 42 மீட்டர் எனவும் மற்றும் தற்போது புதிய விவசாய மின்இணைப்பு கோரும் புல எண்.154/5ல் உள்ள ஆழ்துளைகிணற்றிற்கு இடையே உள்ள இடைவெளி தூரம் 59 மீட்டர் என களஆய்வின் மூலம் தெரியவருகிறது என்று எதிர்மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி புல எண் மாற்றம் வாரிய விதிகளின்படியும் NABARD guidelinesன் படியும் முறையாக செய்யப்படவில்லை என்று இம்மன்றம் கருதுகிறது. எனவே மனுதாரரின் மேற்படி கோரிக்கையினை ஏற்க இயலாது என்று இம்மன்றம் தீர்வு செய்கிறது.

மேற்கண்ட முடிவுடன் மனு எண்06/2017–18 இறுதி முடிவு செய்யப்படுகிறது.”

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>:

4.1 மாவட்ட குறைதீர் மன்றம் மேல்முறையீட்டாளரின் ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் பிறப்பித்திருக்கும் ஆணை சட்ட விதிகளுக்கு புறம்பானதாகும்.

4.2 இந்த மேல்முறையீட்டாளர் அவரின் கிணற்றிற்கு மின்இணைப்பு கேட்டு விண்ணப்பம் கொடுத்தபோது அந்த விண்ணப்பப்படி கிணறு உள்ளதா அது எந்த புல எண்ணிலுள்ளது அது மின்இணைப்பு கொடுப்பதற்குறிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுள்ளதா என்பதை எல்லாம் 1வது எதிர்மனுதாரர் அலுவலகமே செய்ய கடப்பாடு உள்ள நிலையில் அவர் பொறுப்பை தட்டிக்கழித்துவிட்டு மேல்முறையீட்டாளர் பெயரில் குற்றம் சுமத்தி மேற்படியாரின் மனுவை தள்ளுபடி செய்திருப்பது இயற்கை நீதிக்கும் மற்றும் மின்சார வாரிய சட்டத்திற்கும் முற்றிலும் புறம்பானதாகும். 1வது எதிர்மனுதாரர் அவர்களும் இந்த மேல்முறையீட்டாளரின் நிலங்களில் சர்வே நம்பர் 154/*4A*, 154/5 ஆகியவை சம்மந்தமாக வருவாய் ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பிக்குமாறு சொன்னதில் இந்த மேல்முறையீட்டாளரும் அவரது ஆணைக்கிணங்க பெரும் பணம் செலவு செய்து மேற்படி ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். அவற்றை எல்லாம் பெற்று பரிசீலனை செய்த 1வது எதிர்மனுதாரர் எல்லாம் சரியாக உள்ளதாகவும் 1 மாத காலத்திற்குள் மின்இணைப்பு வந்துவிடும் என்று கூறப்பட்டது. அவ்வாறு உள்ள நிலையில் மின் இணைப்பு வழங்காததும் 1வது எதிர்மனுதாரர் தவறே தவிர இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் எந்தத் தவறும் இல்லை என்பதை கீழமை நீதிமன்றம் தன் கவனத்தில் எடுத்துக் கொள்ள தவறிவிட்டது.

4.3 இந்த மேல்முறையீட்டாளரும் தனக்கு பாத்தியமான புல எண் 154/5 விஸ்தீரணம் 0.30.0 ஏர்ஸ் நிலத்திலுள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு மின்இணைப்பு கேட்டு தான் கடந்த 13.10.1998ல் விண்ணப்பம் செய்துள்ளார். அதுவும் முறையாக அலுவலகத்தில் பதியப்பட்டு நிலுவையிலிருந்து வந்தது. அதன் பின்னீடு கடந்த ஜனவரி 2017ல் அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் மின்இணைப்பு கொடுக்க உத்தரவு இருந்தது. ஏற்கனவே 13.10.1998ல் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பமானது பின்னீடு 23.7.2012ல் சுயநிதி திட்டம் சாதாரண மின்இணைப்புக்காக முறைப்படி மாற்றம் செய்யப்பட்டு அதுவும் 1வது எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவும் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணம் இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் 1வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில்

அதை குறைதீர்க்கும் மன்றம் சரியாக பரிசீலனை செய்யாமலும் தன் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமலும் தீர்ப்பு வழங்கி இருப்பது சட்ட விதிகளுக்கு முரணானதாகும்.

4.4 மேலும், இந்த மேல்முறையீட்டாளரும் இலவச மின் இணைப்பிற்கு 2012–லியே 35வது நபராக தர வரிசையிலிருப்பதாக 1 வது எதிர்மனுதாரர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்திருந்தது உண்மையா ? இல்லை பொய்யா ? என்பதை முறையாக விசாரணை செய்யாமல் கீழமை நீதிமன்றம் தவறவிட்டுவிட்டது.

4.5 இந்த 1வது எதிர்மனுதாரரும் மேல்முறையீட்டாளரின் நிலத்தை அளவை செய்து பார்வையிட்டு சென்றுள்ள நிலையில் தற்பொழுது கிணறே இல்லை என்று சொல்வது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. அவ்வாறு கிணறே இல்லை என்னும் பட்சத்தில் மேல்முறையீட்டாளரின் மனுவை உடனே Reject செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததிலிருந்தே மனுதாரர் விண்ணப்பித்த படி கிணறு உள்ளது என்பது தெளிவாக புலப்படுகிறது. இந்த அம்சத்தை கீழமை நீதிமன்றம் சரியாக தன் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் ஆணை பிறப்பித்துள்ளதும் சட்ட விதிகளுக்கு முரணானதாகும்.

4.6 மேலும், இந்த 1வது எதிர்மனுதாரர் அறிவுறுத்தலின்படியே 5 குதிரை திறன் உள்ள மின் மோட்டாரையும் அதனுடன் சேர்ந்த உபகரணங்களையும் இந்த மேல்முறையீட்டாளர் விலைக்கு வாங்கி அதற்குரிய ஆவணங்களையும் 1வது எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ள நிலையில் தற்பொழுது மின்இணைப்பு கொடுக்க முடியாது என விண்ணப்பதை ரத்து செய்து இருப்பதும் ஏற்புடையதல்ல.

4.7 இந்த மேல்முறையீட்டாளர் ஏதோ தனக்கு உடல்நிலை சரியில்லை எனவும் தற்பொழுது மின்இணைப்பு வேண்டாம் என்றும் தனக்கு அடுத்த தரவரிசையில் உள்ள நபர்களுக்கு மின்இணைப்பு கொடுக்கும்படி சொல்லியதாக சொல்வதும் பொய்யான கூற்றாகும். அவை யாவும் 1வது எதிர்மனுதாரர் இந்த வழக்கிற்காக கூறப்பட்ட பொய்யான சங்கதியாகும்.

4.8 இந்த 1வது எதிர்மனுதாரர் இந்த மேல்முறையீட்டாளர் ஏற்கனவே மின்இணைப்பு பெற்று பயன்படுத்தி வரும் வட்ட கிணற்றை வருவாய்த்துறை மூலம் பெறப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடாமல் புதிய விண்ணப்பம் பதிவு செய்துள்ளார் என்பது தவறாகும். வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் வருவாய்துறையின் மூலம் வழங்கப்பட்ட ஆவணங்களே தவிர

இந்த மேல்முறையீட்டாளரால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் இல்லை என்பதை இந்த கீழமை நீதிமன்றம் தன் கவனத்தில் எடுத்துக் கொள்ள தவறிவிட்டது.

4.9 மேலும், 1வது எதிர்மனுதாரர் சொல்வது போல் 23.7.2012ல் சர்வே மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளதில் அதுவும் 1வது எதிர்மனுதாரருக்கு தெரிந்துள்ள நிலையில் அப்போதே அது பற்றி மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்காததும் 1வது எதிர்மனுதாரர் செய்த தவறுகை என்று கீழமை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது.

4.10 மேலும், இந்த மேல்முறையீட்டாளரும் புல எண். எண்.154/4Aல் 2 விண்ணப்பங்கள் பதிவு செய்ததாகவும் 2வது பதிவு எண்ணின்படி 16,17 சாதாரண விவசாய தயார் நிலை வரிசையில் 5வது நபராக இருந்த காரணத்தால் மதிப்பீடு தயார் செய்ய நிலத்தை ஆய்வு செய்தபோது சந்தேகம் ஏற்பட்டதாகவும் அதனை சரி பார்க்கவே மேல்முறையீட்டாளரிடம் மீண்டும் வருவாய் ஆவணங்கள் கோரியதாகவும் அப்போது தான் ஒரே சர்வே நம்பரில் (ஒரே புல எண்ணில்) இரண்டு மின்இணைப்புக்கு விண்ணப்பித்துள்ளதாக தெரியவந்ததாக சொல்வது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள தக்கதில்லை.

4.11 மேலும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் கள ஆய்வு செய்த பின்பு எல்லாம் சரியாக உள்ளதாக தெரிந்த பின்பு மின்மோட்டாரையும் உபகரணங்களையும் வாங்கும்படி மேல்முறையீட்டாளரிடம் வலியுறுத்தப்பட்டதே தவிர தற்பொழுது வரை ஆய்வில் புல எண்.154/5க்கும் இடையே 159 மீட்டர் இடைவெளி உள்ளதாக சொல்வதும் வழக்கின் தோதிற்காக சொல்லப்பட்ட சங்கதிகள் ஆகும்.

4.12 கீழமை நீதிமன்றத்தின் உத்தரவு பாரா 3, 4லும் மின்சார துறையிலிருந்து கள ஆய்வு செய்யப்படவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. அவ்வாறு உள்ள நிலையில் மேல்முறையீட்டாளர் ஒரே புல எண்ணில் இரண்டு விண்ணப்பங்கள் பதிவு செய்துள்ளதாக சொல்வது ஏற்புடையதானதல்ல. புல எண். 154/5 என்பதும் புல எண்.154/4A ஒரே புல எண்ணில் இரண்டு sub division கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உள்ள நிலையில் அந்த புல எண்களை ஒரே புல எண் என்று எடுத்துக் கொளளக்கூடாது. ஒரே புல எண்ணுக்கு இரண்டு sub divison கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அதை இரண்டு புல எண்களாகத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர அதை ஒரே புல எண்ணாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அந்த வகையில் இந்த மேல்முறையீட்டாளர் மின்

இணைப்பு கோரியது எந்த வகையிலும் சட்டத்திற்கு முரணானது அல்ல. மேலும், மின்சார வாரிய அலுவலகத்தால் கள ஆய்வு செய்யப்படவில்லை என்பதை கீழமை நீதிமன்றம் தன் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளதில் அதற்கு பொறுப்பாளியான மின்சார வாரியத்தின் அலுவலர்கள் மீது தான் சட்டப்படி நடவடிக்கை எடுத்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும்.

4.13 ஆகையால் மேல்முறையீட்டு நீதிமன்றம் இந்த மேல்முறையீட்டளரின் மேல்முறையீட்டை அனுமதித்து சிவகங்கை மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் கடந்த 14.9.2017ல் பிறப்பித்த ஆணையை ரத்து செய்து இந்த மேல்முறையீட்டாளர் அளித்துள்ள விண்ணப்பத்தை ஏற்று இலவச மின்இணைப்பு கொடுக்க உத்தரவிட பிரார்த்திக்கப்படுகிறது.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u> :**

5.1 மேல்முறையீட்டாளர் திரு. கா. மாசாணம் த/பெ கருப்பையா திருப்புவனம் அவர்கள் திருப்புவனம் தாலுகா, டி. வேலாங்குளம் கிராமத்தில் உள்ள சர்வே எண்.154/4Aல் உள்ள கிணற்றிற்கு 7.3.1997 அன்று மின்இணைப்பு எண்.169 என்று விவசாய மின்இணைப்பு பெற்றுள்ளார். மேலும், மேற்கண்ட அதே சர்வே எண்.154/4Aல் உள்ள மற்றொரு கிணற்றுக்கு ஏற்கனவே உள்ள மின்இணைப்பை மறைத்து பதிவு எண்.98/98–99 நாள் 13.10.1998 அன்று இரண்டாவது முறை விவசாய விண்ணப்பம் பதிவு செய்ததின் அடிப்படையில் இரண்டு லட்சம் சிறப்பு முன்னுரிமை திட்டத்தில் அறிவிப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

5.2 மேற்கண்ட அறிவிப்புக் கடிதத்திற்கு மேல்முறையீட்டாளர் திரு. மாசாணம் அவர்கள் தனக்கு உடல்நிலை சரியில்லை எனத்தெரிவித்து காலநீட்டிப்பு பெற்றுள்ளார். ஆனால், மேல்முறையீட்டாளர் திரு. மாசாணம் அவர்கள் மேற்கண்ட அறிவிப்புக் கடிதத்தில் தெரிவித்துள்ள சர்வே எண். 154/4Aல் உள்ள கிணற்றில் போதிய நீர் வளம் இல்லை என தெரிவித்து 154/5ல் ஒரு போர் கிணறு அமைத்து சர்வே எண் மாற்றம் பெற்று உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்/திருப்பாச்சேத்தி அலுவலகத்தில் 17.8.2012 அன்று தயார் நிலை பதிவு செய்துள்ளார். மேற்கண்ட சர்வே எண். மாற்றம் செய்யும் விண்ணப்பத்திலும் சர்வே எண்.154/4Aல் மற்றொரு கிணறு மின்இணைப்பு எண்.169 என்ற எண்ணுடன் உள்ளது என்பதை தெரிவிக்காமல் மறைத்து விட்டார்.

5.3 மேற்கண்ட தயார் நிலை பதிவிற்கு தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறையின்படி 2016–17ஆம் ஆண்டு குறியீட்டில் (target) மின்இணைப்பு வழங்க உத்தரவு அளிக்கப்பட்டதின் பேரில் மேற்கண்ட இடத்தை உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்/திருப்பாச்சேத்தி அவர்கள் ஆய்வு செய்தபோது ஏற்கனவே மின்இணைப்பு உள்ள சர்வே எண்.154/4Aல் இருந்து 154/5க்கு சர்வே எண் மாற்றம் செய்யப்பட்டு தயார்நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிய வந்ததின் அடிப்படையில் மின்வாரிய விதிமுறைகளுக்கு முரண்பாடாக பதிவு செய்யப்பட்டது தெரியவந்தது.

5.4 எனவே, மேல்முறையீட்டாளரின் தயார்நிலை பதிவிற்கு பின்னால் பதிவு செய்தவர்களுக்கு மேல்முறையீட்டாளரின் தயார்நிலை பதிவின் முன்னுரிமையை தளர்த்தி மின்இணைப்பு வழங்குவதற்காக மேல்முறையீட்டாளரின் ஒப்புகை கடிதம் பெற்று மேல்முறையீட்டாளருக்குப் பின் பதிவு செய்தவர்களுக்கு மின்இணைப்பு வழங்க ஆவண செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்புகை கடிதமானது இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் தான் மேல்முறையீட்டாளரிடம் பெறப்பட்டுள்ளது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் கூற்று முற்றிலும் தவறானதாகும்.

5.5 மேலும் மேற்கண்ட விண்ணப்பத்தின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்/திருப்பாச்சேத்தி, உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ மானாமதுரை மற்றும் செயற்பொறியாளர்/மானாமதுரை ஆகியோர் முறையே தமது உயர் அதிகாரியிடம் அறிவுரை வழங்கக் கோரியுள்ளனர். மேற்கண்ட சூழ்நிலையில் மேல்முறையீட்டாளர் திரு. க. மாசாணம், அவர்கள் மாவட்ட குறைதீர் மன்றத்தில் விரைவாக மின்சாரம் வழங்க வலியுறுத்துமாறு மனு அளித்ததின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் திரு. க. மாசாணம் த/பெ கருப்பையா மின்வாரிய விதிமுறைகளுக்கு முரணாக விவசாய மின்இணைப்பு கோரியது தெரியவந்ததன் அடிப்படையில் உரிய விசாரணை செய்து மேற்கண்ட மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை நிராகரித்து கீழ்கண்டவாறு உத்திரவிட்டது.

(i) தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் Lr.No.SE/RE/&(D)/ EE/ RE/A1/ F.Doc /Do986/11, Dt.22.07.2011 அறிவிப்பின்படி ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரு விவசாய மின் இணைப்பிற்கு மேல் வழங்காமல் இருப்பதற்காக விண்ணப்பதாரரிடம் வேறு விண்ணப்பம் எதுவும் மின்இணைப்பு கோரிய கிணற்றிற்கு முன்னர் சமர்ப்பித்து நிலுவையில் இல்லை என்றும், மின்இணைப்பு எதுவும்

விண்ணப்பதாரரின் பெயரில் மேற்கண்ட கிணற்றில் இல்லை என்றும் அவ்வாறு உள்ளது என்று அறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் ஒரு உறுதிப்பத்திரம் விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரே புல எண்ணில் விவசாய மின்இணைப்புகள் வழங்குவதில் வாரிய ஆணை Lr.No.SE/RE/&(D)/ EE/ RE/A1/ F.Doc/D.1472/10, Dt.23.10.2010 ல் NABARD guide lines ன்படி ஒரு கிணற்றிற்கும் மற்றொரு கிணறு அல்லது ஆழ்துளை கிணறு ஆகியவற்றிற்கு இடையே உள்ள இடைவெளி (distance) குறித்து தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) புல எண் மாற்றம் செயற் பொறியாளரின் அனுமதியுடன் மின்பளுவில் மாற்றம் இல்லாமல் புல எண் மாற்றம் செய்து கொள்ளலாம் என்று உரிய ஆணைகள் உள்ளது. எனவே, அதன்படி புல எண் மாற்றம் செய்யும் போது கள ஆய்வில் சம்பந்தப்பட்ட இடம் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று தெரிகிறது.

(iv) ஆனால், அன்றைய நிலையில் இருந்த கள அலுவலர்களால் மேற்படி புல எண் மாற்றம் வாரிய விதிமுறையின்படி மேற்கொண்டிருக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப் பட்டிருந்தால் அன்றே மேற்படி புல எண்ணில் விவசாய மின்இணைப்பு உள்ள விபரம் தெரிந்து மனுதாரரிடம் தெரிவிக்கப்பட்டு இருக்கும். எனவே மேற்படி புல எண் மாற்றம் வாரிய விதிமுறைகளின்படி அன்றைய நிலையில் இருந்த எதிர்மனுதாரர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் தங்களது கடமையை முறையாக செய்யவில்லை என்றும் இம்மன்றம் கருதுகிறது.

(v) ஆனால், மனுதாரர் மேற்படி புல எண்ணில் ஏற்கனவே ஒரு கிணறு உள்ளது என்பதை விண்ணப்பம் பதிவு செய்யும்போதும் தெரிவிக்கவில்லை. மேலும், தயார் நிலை பதிவு செய்ய கால அவகாசம் பெறப்படும் போதும் தெரிவிக்கப்படவில்லை. அதன் பின்பு மீண்டும் புல எண் மாற்றம் செய்யும்போதும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மேற்கண்ட செயல்பாடு சந்தேகத்திற்குரியதாக உள்ளது.

(vi) மனுதாரரின் மேற்படி கோரிக்கையினை பரிசீலிக்கும் போது ஏற்கனவே விவசாய மின்இணைப்பு பெற்றுள்ள புலஎண் 154/4Aல் உள்ள வட்ட கிணற்றிற்கும் அதே புல எண்ணில் உள்ள மற்றொரு கிணற்றிற்கும் இடையே உள்ள தூரம் 42 மீட்டர் எனவும் மற்றும் தற்போது புதிய விவசாய மின்இணைப்பு கோரும் புல எண்.154/5ல் உள்ள ஆழ்துளைகிணற்றிற்கு இடையே உள்ள இடைவெளி தூரம் 59 மீட்டர் என

களஆய்வின் மூலம் தெரியவருகிறது என்று எதிர்மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி புல எண் மாற்றம் வாரிய விதிகளின்படியும் NABARD guidelinesன் படியும் முறையாக செய்யப்படவில்லை என்று இம்மன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரரின் மேற்படி கோரிக்கையினை ஏற்க இயலாது என்று மாவட்ட மின் நுகர்வோர் மன்றம் தீர்வு செய்தது.

மேற்கண்ட மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் உத்திரவு முற்றிலும் உண்மை என்பதால் மேற்கண்ட உத்திரவினை உறுதி செய்யுமாறு தமிழ்நாடு மின்குறைதீர்ப்பாயத்திடம் பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**6.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **21.11.2017** அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

**6.2** மேல்முறையீட்டாளர் திரு. கா. மாசாணம் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**6.3** எதிர்மனுதாரர் சார்பில் திரு. J. பிரேம்குமார், செயற்பொறியாளர் / பகிர்மானம்/மானாமதுரை மற்றும் திருமதி. S. ஷர்மிளா தேவி, உதவி பொறியாளர்/திருப்பாச்சேத்தி ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

**<u>7. மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

7.1 மேல்முறையீட்டாளர் திரு.மாசானம் அவர்கள் கேட்புரையில் கலந்து கொண்டு, அவரது மேல்முறையீட்டு மனுவில் உள்ள வாதங்களையே வலியுறுத்தினார்.

7.2 மனுதாரர் தான் மேற்படி விவசாய மின் இணைப்பை பெறுவது தொடர்பாக எதிர்மனுதாரர்கள் கேட்ட அனைத்து ஆவணங்களையும் சமர்பித்த பின்பு தற்போது விதிகள் இல்லை என்று கூறி விவசாய மின் இணைப்பு தர இயலாது என்று கூறுவது ஏற்க இயலாது எனவும் மேற்படி விவசாய மின் இணைப்பினை உடனடியாக வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

7.3 எதிர்மனுதாரர் தன்னுடைய நிலத்தை அளவை செய்து பார்வையிட்டு சென்றுள்ளதாகவும் அவ்வாறுள்ள நிலையில் தற்பொழுது கிணறே இல்லை என்று சொல்வது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும் அவ்வாறு கிணறே இல்லை என்னும் பட்சத்தில்

மேல்முறையீட்டாளரின் மனுவை உடனே Reject செய்திருக்க வேண்டும் என்றும் வாதிட்டார். அவ்வாறு செய்யாததிலிருந்தே மனுதாரர் விண்ணப்பித்த படி கிணறு உள்ளது என்பது தெளிவாக புலப்படுகிறது என்றும் வாதிட்டார்.

7.4 மேலும், இந்த எதிர்மனுதாரரின் அறிவுறுத்தலின்படியே 5 குதிரை திறன் உள்ள மின் மோட்டாரையும் அதனுடன் சேர்ந்த உபகரணங்களையும் தான் விலைக்கு வாங்கி அதற்குரிய ஆவணங்களையும் 1வது எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ள நிலையில் தற்பொழுது மின்இணைப்பு கொடுக்க முடியாது என விண்ணப்பதை ரத்து செய்து இருப்பதும் ஏற்புடையதல்ல என்றும் தெரிவித்தார்.

7.5 தான் ஏற்கனவே மின்இணைப்பு பெற்று பயன்படுத்தி வரும் வட்ட கிணற்றை வருவாய்த்துறை மூலம் பெறப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடாமல் புதிய விண்ணப்பம் பதிவு செய்ததாக எதிர்மனுதாரர் கூறுவது தவறாகும். வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் வருவாய்துறையின் மூலம் வழங்கப்பட்ட ஆவணங்களே தவிர தன்னால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றுரைத்தார்.

7.6 மேலும், தான் புல எண். எண்.154/4Aல் 2 விண்ணப்பங்கள் பதிவு செய்ததாகவும் 2வது பதிவு எண்ணின்படி 16–17 சாதாரண விவசாய தயார் நிலை வரிசையில் 5வது நபராக இருந்த காரணத்தால் மதிப்பீடு தயார் செய்ய நிலத்தை ஆய்வு செய்தபோது தான் ஒரே சர்வே நம்பரில் (ஒரே புல எண்ணில்) இரண்டு மின்இணைப்புக்கு விண்ணப்பித்துள்ளதாக தெரியவந்ததாக எதிர்மனுதாரர் சொல்வது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள தக்கதில்லை என்று வாதிட்டார்.

7.7 ஒரே புல எண்ணில் இரண்டு விண்ணப்பங்கள் பதிவு செய்துள்ளதாக சொல்வது தனக்கு ஏற்புடையதானதல்ல என்றும் புல எண். 154/5 என்பதும் புல எண்.154/4A என்பதும் ஒரே புல எண்ணில் இரண்டு sub division செய்யப்பட்டதாகும். அவ்வாறு உள்ள நிலையில் அந்த புல எண்களை ஒரே புல எண் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒரே புல எண்ணுக்கு இரண்டு sub divison கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அதை இரண்டு புல எண்களாகத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர அதை ஒரே புல எண்ணாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் அந்த வகையில் தான் மின் இணைப்பு கோரியது எந்த வகையிலும் சட்டத்திற்கு முரணனாது அல்ல என்றும் வாதிட்டார். ஆகவே

தான் அளித்துள்ள விண்ணப்பத்தை ஏற்று இலவச மின்இணைப்பு கொடுக்க உத்தரவிட வேண்டினார்.

8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் : -</u>

8.1 மேல்முறையீட்டாளர் திரு. கா. மாசாணம் அவர்கள் டி. வேலாங்குளம் கிராமத்தில் உள்ள சர்வே எண்.154/4Aல் உள்ள கிணற்றிற்கு 7.3.1997 அன்று மின்இணைப்பு எண்.169 என்று விவசாய மின்இணைப்பு பெற்றுள்ளதாகவும், மேலும், மேற்கண்ட அதே சர்வே எண்.154/4Aல் உள்ள மற்றொரு கிணற்றுக்கு ஏற்கனவே உள்ள மின்இணைப்பை மறைத்து பதிவு எண்.98/98–99 நாள் 13.10.1998 அன்று இரண்டாவது முறை விவசாய விண்ணப்பம் பதிவு செய்ததின் அடிப்படையில் இரண்டு லட்சம் சிறப்பு முன்னுரிமை திட்டத்தில் அறிவிப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

8.2 மேற்கண்ட அறிவிப்புக் கடிதத்திற்கு மேல்முறையீட்டாளர் திரு. மாசாணம் அவர்கள் தனக்கு உடல்நிலை சரியில்லை எனத்தெரிவித்து காலநீட்டிப்பு பெற்றுள்ளதுடன் அறிவிப்புக் கடிதத்தில் தெரிவித்துள்ள சர்வே எண். 154/4Aல் உள்ள கிணற்றில் போதிய நீர் வளம் இல்லை என தெரிவித்து 154/5ல் ஒரு போர் கிணறு அமைத்து சர்வே எண் மாற்றம் பெற்று உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்/திருப்பாச்சேத்தி அலுவலகத்தில் 17.8.2012 அன்று தயார் நிலை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்கண்ட சர்வே எண். மாற்றம் செய்யும் விண்ணபத்திலும் சர்வே எண்.154/4Aல் மற்றொரு கிணறு மின்இணைப்பு எண்.169 என்ற எண்ணுடன் உள்ளது என்பதை தெரிவிக்காமல் மறைத்து விட்டதாகவும் தெரிவித்தார்.

8.3 மேற்கண்ட தயார் நிலை பதிவிற்கு தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறையின்படி 2016–17ஆம் ஆண்டு குறியீட்டில் (target) மின்இணைப்பு வழங்க உத்தரவு அளிக்கப்பட்டதின் பேரில் மேற்கண்ட இடத்தை உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்/திருப்பாச்சேத்தி அவர்கள் ஆய்வு செய்தபோது ஏற்கனவே மின்இணைப்பு உள்ள சர்வே எண்.154/4Aல் இருந்து 154/5க்கு சர்வே எண் மாற்றம் செய்யப்பட்டு மின்வாரிய விதிமுறைகளுக்கு முரண்பாடாக தயார்நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவந்ததாக தெரிவித்தார்.

8.4 தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் Lr.No.SE/RE/&(D)/ EE/ RE/A1/ F.Doc / Do986/11, Dt.22.07.2011 அறிவிப்பின்படி ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரு விவசாய

மின் இணைப்பிற்கு மேல் வழங்காமல் இருப்பதற்காக விண்ணப்பதாரரிடம் வேறு விண்ணப்பம் எதுவும் மின்இணைப்பு கோரிய கிணற்றிற்கு முன்னர் சமர்ப்பித்து நிலுவையில் இல்லை என்றும், மின்இணைப்பு எதுவும் விண்ணப்பதாரரின் பெயரில் மேற்கண்ட கிணற்றில் இல்லை என்றும் அவ்வாறு உள்ளது என்று அறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் ஒரு உறுதிப்பத்திரம் விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக வாதிட்டார்.

8.5 ஒரு கிணற்றிற்கு ஒருவர் பெயரில் ஒரே புல எண்ணில் விவசாய மின்இணைப்புகள் வழங்குவதில் வாரிய ஆணை Lr.No.SE/RE/&(D)/ EE/ RE/A1/ F.Doc/D.1472/10, Dt.23.10.2010 ல் NABARD guide lines ன்படி ஒரு கிணற்றிற்கும் மற்றொரு கிணறு அல்லது ஆழ்துளை கிணறு ஆகியவற்றிற்கு இடையே உள்ள இடைவெளி (distance) குறித்து தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஏற்கனவே விவசாய மின்இணைப்பு பெற்றுள்ள புலஎண் 154/4Aல் உள்ள வட்ட கிணற்றிற்கும் அதே புல எண்ணில் உள்ள மற்றொரு கிணற்றிற்கும் இடையே உள்ள தூரம் 42 மீட்டர் எனவும் மற்றும் தற்போது புதிய விவசாய மின்இணைப்பு கோரும் புல எண்.154/5ல் உள்ள ஆழ்துளைகிணற்றிற்கு இடையே உள்ள இடைவெளி தூரம் 59 மீட்டர் என களஆய்வின் மூலம் தெரியவருகிறது என்றும் தெரிவித்தார். எனவே, மேற்படி புல எண் மாற்றம் வாரிய விதிகளின்படியும் NABARD guidelinesன் படியும் முறையாக செய்யப்படவில்லை என்று தெரிவித்தார்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்வதற்கு உரிய விதிமுறைகள் என்ன?

(ii) மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு கோரும் அசல் விண்ணப்பத்தில் புல எண்.154/4A யிலுள்ள கிணற்றில் இருந்து புல எண்.154/5 ல் அமைந்துள்ள கிணற்றிற்கு புல எண் மாற்றம் செய்தது விதிமுறைகளின்படி உள்ளதா ?

(iii) மேல்முறையீட்டாளர் அளித்துள்ள விண்ணப்பத்தை ஏற்று அவருக்கு இலவச மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்பது ஏற்புடையதுதானா ?

**10.** <u>வழக்கெழுவினா 1–ற்கான தீர்வு</u> **:**

**10.1** ஒரு விவசாய மின்இணைப்பை வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்வது சம்பந்தமாக மின்சார வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் விவசாய பகிர்மான விதிதொகுப்பு இனங்களில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமதாரர் ஏற்படுத்திய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும். விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிகளானது விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் உள்ள கிணற்றை மாற்றுவதற்கும் பெருந்தும் என்று மின்சார வாரியத்தலைவர் **05–12–1983**ல் வெளியிடப்பட்டுள்ள குறிப்பாணையில் தெரிவித்துள்ளார். மேலும், உறுப்பினர்/பகிர்மானம் அவர்கள் **28–12–1991**ல் அனைத்துத் தலைமைப் பொறியாளர் பகிர்மானத்திற்கும் அனுப்பிய சுற்றறிக்கையிலும் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார். எனவே, விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகள் தான் விவசாய மின்இணைப்பு விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்றவும், கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள் ஆகும் என்று தெரிய வருகிறது. விவசாய மின்இணைப்பை மாற்றும் விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

*(A) <u>Memo No.SE/RE&LL/LO/AE4/GW/114/dt. 17-03-1978:-</u>*

*It has been brought to notice that many new applicants for power supply try to take advantage of the relaxations given in the two memos quoted under ref.1 and 2 for shifting of services and attempt to get supply circumventing the priority by initially stating that they are co-owners of wells and later on applying for shifting their service to a new location on the plea of “Non-availability of water”.*

*The instructions issued in memos cited 1 and 2 are therefore partially modified as under :*

*1. The words “non-availability of water” in memo cited (1) are “hereby” deleted.*

*2. Shifting of agricultural service to a new location may be permitted for the same person due to dryness of well provided the new location is in the same village. The work of shifting should be done as deposit contribution work.*

*3. Shifting should not be permitted to a new location outside the village. Such cases should be treated as new applications for power supply and dealt with as per rules according to priority, technical feasibility and viability of each work.*

*4. Shifting of pump sets of enlisting co-owners of wells can also be done as per (2) above only.*

*5. Extension of supply to new applicants as co-owners of wells may be effected provided their ownership of well is certified by an officer of the Revenue Department not below the rank of a Tahsildar and (2) it is accompanied by a certificate from the Project Officer (ARDC) to the effect that there is adequate water for both the pump sets in the same well.*

*(B) <u>Chairman Memo No.SE/RE/DE/SS/A1/C 473-1/83, dated 05-12-1983</u>.*

*1. Shifting of agricultural services from the existing well to another well can be permitted in respect of the following cases subject to technical feasibility:-*

*(i) Shifting from one well to another belonging to the same consumer within the same distribution group of transformers irrespective of the village and*

*(ii) Shifting from one well to another belonging to the same consumer within the same village even if it involves a change from one distribution group of transformers to another.*

*2. The above work will be done as a deposit contribution work.*

*3. This concession will be applicable even in respect of pending applications i.e. where the service has still not been sanctioned but the applicant desires to change the location of the service to another well owned by him.*

*4. Particular care should be taken to ensure that this concession is not abused for trafficking in agricultural service connections. The Assistant Divisional Engineer concerned should personally enquire into the case and satisfy himself that the new well and the lands to be irrigated by it belong to the consumer and the request of the consumer is for bonafide reasons. He should record his inspection note in this regard on the relevant file.*

*<u>(C) Memo No.SE/RE&I/(D)/DE/SS/A1/C473-3/84,(Technical Branch), dated 10-07-1984</u>*

*Sub: Electricity – shifting of services from one well to another*

*Ref: Memo No.SE/RE&I(D)/DE/SS/A1/C/473-1/84, dt.5.12.83.*
*Memo No.SE/RE&!(D)/DE/SS/A1/C.473-2/84, dt.17.5.84*

******

*Further, to the instructions issued to memos cited on shifting of agricultural services at the request of the consumers the following instructions are issued. Requests for extension of supply to a well owned by the applicant in a different location in lieu of the one for which application was presented may also be considered even if estimate for the work has been sanctioned subject to the condition that the works should not have been taken up as on the date of request of the applicant. Conditions outlined in paras 1 and 2 of memo cited vide ref.(1) shall however be applicable for such shifting and instructions contained in para 4 of the memo should be scrupulously followed.*

*<u>(D) Memo No.SE /RE&I/(D)/DE(SS)/AE.w1/C473-5/84,(Technical Branch), dt, 7-1-1985</u>*

*Sub: Electricity – shifting of agricultural service from one well to another –*

*Reg. Ref: (i) Memo No.SE/RE&I(D)/DE(SS)/A1/C/473-1/84, dt.5.12.83.*

*(ii) Memo No.SE/RE&!(D)/DE/(SS)/A1/C.473-2/84, dt.17.5.84.*

*(iii) Memo No.SE/RE&!(D)/DE/(SS)/A1/C.473-3/84, dt.10.7.84.*

****

*The last para of the memo third cited shall be deleted and the following shall be substituted. Conditions outlined in paras (1) subparas (i) and (ii) and para (4) of memos cited vide ref.(1) shall however be applicable for such shifting and instructions contained in paras should be scrupulously followed.*

*(E) Chairman's Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/D.408/90 (Technical Branch), dated 30-07-1990*

*********

*Shifting of agricultural service connection from the existing well to another well in another village belonging to the same consumer may be permitted in the case of the proposed well, being located within the jurisdiction of the same Section even if it is not in the same distribution group transformers. However, such cases shall be permitted by Superintending Engineer of the Circle concerned with on receipt of personal site inspection reports by the Assistant Executive Engineer on the genuineness of the case. Each case shall be carefully examined and orders passed by the Superintending Engineer based on the norms of each case to ensure against abuse.*

*(F) Circular Memo No. SE/IEMC/EEs/AEE2/AE/F III/A-13(Tech Branch), dated 06-12- 1997.*

*In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer may be permitted in the case of the proposed well being located within the jurisdiction of the same division with other conditions remain the same. However, such case shall be permitted by the Superintending Engineer of the circle concerned with on receipt of personal site inspection reports by the Executive Engineer / Operation & Maintenance concerned on the genuineness of the case. Each case shall be carefully examined and order passed by the Superintending Engineer based on the merits of each cases.*

*(G) Memorandum No.SE/IEMC/EE3/AEE2/AE/F.S. 23/D.382/89,(Techl.Br.) dated 02-07-1999.*

*(i) If any consumer under normal priority requests for change of well from the original location to a new location, then no increase in the load will be permitted, under normal priority.*

*(ii) If the applicant, under normal priority requests for change of well from the original location to a new location with the increase in load then, he may be asked to avail supply under RSFS in the application stage itself.*

*(iii) If the consumer does not agree for the above, shifting alone may be permitted for the original load, if the required conditions for shifting are satisfied.*

*(H) <u>Memo No.SE/RE&1(D)/EE/RE/A1/F.Doc/D.2841/04, (Technical Branch), dated 10-12-2004.</u>*

*Of late, clarifications are being requested by the field SEs / CEs in shifting of agriculture service connection effected under SFS category. Shifting of agricultural service to another well belonging to the same party is to be considered only when the existing well has gone dry.*

*(I) <u>Letter No.SE/RE&I(D)/EE/RE/A1F.Doc/D.655/2008 (Technical Branch), dated 05-05- 2008.</u>*

*In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer from one division to another division within the Circle may be permitted by the Superintending Engineer of the Circle concerned. (i) with on receipt of personal site inspection reports by EE / O & M concerned on the genuineness of the case and (ii) with the condition that the date of registration of application of the service for which shifting is requested should be cleared in the Division for which shifting is proposed. The other conditions applicable for shifting remain the same. The above instructions also applicable for pending applications, with the above conditions and the service may be effected under the category for which supply is requested.*

*(J) <u>Letter No,SE.RE I(D).EE.RE.1.F,Doc,.D,1519 .11Ï dt,1.12.2011</u>*

*Sub: Electricity – shifting of agricultural service connection – Reg.*

*Ref: 1. This Office Lr.No.SE/RE&1/(D)/EE/RE/A1/D241, dt.15.2.2011.*

*2. This Office Lr.No.SE/RE&I(D)/EE/RE/A1/D6558 dt.6.6.2008.*

*In the reference (1) letter cited, instructions were issued to consider shifting of agricultural service connection irrespective of the reasons submitted by the applicant under DCW basis.*

*In supersession of the instructions issued vide reference (1) letter, the following instructions are issued in addition to the instruction issued vide reference (2) letter cited:-*

*1.0. Shifting of existing agriculture service connection may be permitted only if the existing and proposed location of the land and well/bore well are having agriculture operations.*

*2.0. The shifting of agriculture service connection may be considered in case of dryness, insufficient water and due to water pollution in the existing well / bore well.*

*3.0. Necessary certificate from the concerned authorities should be obtained for the reasons stated by the applicant.*

*4.0. Shifting of existing agriculture service connection should be done under DCW basis.*

*5.0. These instructions are applicable for all categories of existing agriculture service connections such as Normal, RSFS Schemes, etc.*

*6.0. This is also applicable for change of location of the well / bore well requested at the application stage itself.*

10.2. மேற்கண்ட சுற்றறிக்கை, மற்றும் குறிப்பாணைகளின்படி கீழ்க்கண்ட விதிகளின் பேரில்தான் விவசாய மின்இணைப்பு (அல்லது) விவசாய மின்இணைப்பு விண்ணப்பத்தின் மனுவை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியும் என்று தெரிகிறது.

(i) கிணற்றில் தண்ணீர் இல்லை என்றாலும் நீர் விவசாயத்திற்கு தேவையான அளவு இல்லையென்றாலும், நீர் மாசுபட்டு இருந்தாலும் ஒருவரின் விவசாய மின்இணைப்பு அவருக்குச் சொந்தமான வேறு கிணற்றிற்கு மாற்றப்படலாம். ஆனால், மாற்றப்படுவதற்கு கூறப்படும் காரணத்திற்கான சான்றுகள் சம்பந்தப்பட்ட அதிகாரம் உள்ளவர்களிடமிருந்து பெறப்பட்டு இருக்க வேண்டும்.

(ii) இரண்டு கிணறுகளும் ஒரே மின்பகிர்மான மின்மாற்றிகளில் இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அவை வேறு கிராமங்களில் இருக்கலாம்.

(iii) இரண்டு கிணறுகளும் ஒரே கிராமத்தில் இருந்தால் மின்பகிர்மான மின்மாற்றி வேறாக இருந்தாலும், மாற்றப்படலாம்.

(iv) மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு ஆனால் வேலை தொடங்கப்படாமல் இருக்கும் நிலுவையிலுள்ள விண்ணப்பங்களுக்கும் இது பொருந்தும். இந்தச் சலுகையை (concession) தவறாக பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காக அந்த பகுதி உதவி கோட்ட பொறியாளரால் விசாரிக்கப்பட்டு புதிய கிணறும், நீர் பயன்படுத்தப்படும் நிலங்களும், நுகர்வோருக்கே சொந்தம் என்பதையும், நுகர்வோரின் கோரிக்கை உண்மையான காரணங்களுக்காகத்தான் (bonafide reasons) என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் உதவி கோட்ட பொறியாளரின் அறிக்கை அந்தக் கோப்பில் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(v) மேலும் அந்த வேலைக்கு ஆகும் செலவை, நுகர்வோரிடம் வசூலிக்க வேண்டும். மதிப்பீடு DCWல் செய்யப்படவேண்டும். ஆனால், நிலுவையிலுள்ள விண்ணப்பத்திலுள்ள கிணற்றிற்கு பதில் வேறு கிணற்றில் பெற விரும்பினால் DCW முறையில் மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. (DCW-ல் செய்யவேண்டும் என்ற நிபந்தனை 7.1.1985 நாளிட்ட வாரியத்தால் இடப்பட்டுள்ள ஆணையில் நீக்கப்பட்டுள்ளது)

(vi) (அ) சாதரண வரிசையில் (Normal priority) உள்ள நுகர்வோர், கிணறு மாற்ற விரும்பினால், மின்பளுவை (load) அதிகரிப்பதற்கு அனுமதியில்லை.

(ஆ) சாதாரண வரிசையில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர் மின்பளுவை அதிகரிக்க வேண்டும் என்றால், விண்ணப்பதாரர், மின்இணைப்பை SFS முறையில் பெற வேண்டும்.

(இ) மேற்கண்ட முறையில் (SFS–ல்) மின்இணைப்பை பெற விரும்பாவிடில், விண்ணப்பித்த மின்பளுவுடன் கிணறு மாற்றப்படலாம், மற்ற மாற்றத்திற்கான விதிகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

(vii) SFS முறையில் பெறப்பட்ட மின்இணைப்புகளும், விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகளின்படி இருந்தால் மாற்றிக் கொள்ளலாம்.

(viii) ஒரே பிரிவு அலுவலகத்தின் எல்லைக்குட்பட்டு வரும் ஒரு கிராமத்திலுள்ள கிணற்றிலிருந்து மறு கிராமத்திலுள்ள கிணற்றிற்கு அவை வெவ்வேறு மின்பகிர்மான மின்மாற்றிகளில் இருந்தாலும் மாற்றம் செய்யலாம். ஆனால் அந்த விண்ணபத்தின் நம்பகத் தன்மையைபற்றி உதவி செயற்பொறியாளரின் ஆய்வறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படவேண்டும்.

(ix) ஒரு கோட்டத்திற்குள் இருக்கும் ஒரு கிணற்றிலிருந்து மற்றொரு கிணற்றிற்கு மாற்றம் கோரும் விண்ணபத்தின் நம்பகத் தன்மையை, அந்த கோட்டத்தின் செயற்பொறியாளர் ஆராய்ந்து அளிக்கும் அறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படலாம்.

(x) ஒரு கோட்டத்திலுள்ள விவசாய மின்இணைப்பு வேறுகோட்டத்திலுள்ள அந்த மின்நுகர்வோருக்குச் சொந்தமான கிணற்றிற்கு மாற்றிக் கொள்ள மேற்பார்வை பொறியாளர் அனுமதிப்பதற்கு கீழ்கண்ட விதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்பொறியாளர் அவர்கள் அந்த இடத்தை ஆராய்ந்து அந்த விண்ணபத்தின் நம்பகத்தன்மை (genuineness)ஐ பற்றி சான்று அளித்திருக்க வேண்டும்.

(ஆ) எந்த விண்ணபத்திற்கு கிணறு மாற்றம் கோரப்படுகிறதோ அந்த விண்ணபத்தின் பதிவு தேதி வரை உள்ள விண்ணப்பம் மாற்றம் கோரப்படுகிற கோட்டத்தில் மின்னிணைப்பு பெற்றிருக்க வேண்டும்.

**<u>11. வழக்கெழுவினா 2–ற்கான தீர்வு–</u>**

**11.1** இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் **12.07.2012** நாளிட்ட கடிதத்தில் கோரியிருந்த வேண்டுகோளுக்கிணங்க செயற்பொறியாளர் அவர்கள் **27.07.2012** அன்று புல எண்.**154/4A**ல் அமைந்துள்ள கிணற்றில் நீர் ஆதாரம் இல்லாததால் புல எண்.**154/5** ற்கு புல எண் மாற்றம் செய்து ஆணை வழங்கியுள்ளார்.

**11.2** மேல்முறையீட்டாளரின் **12.07.2012** நாளிட்ட கடிதத்தை ஆராயும்பொழுது அவர் விண்ணப்பித்த புல எண்.**154/4A** அமைந்துள்ள கிணற்றின் ஊற்று நீர் குறைந்து விட்டதால் புல எண் மாற்றம் கோருவதாக தெரிவித்துள்ளார். அதன் சம்பந்தப்பட் பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*நான் கடந்த **12.10.98** அன்று விவசாய மின் இணைப்பு வேண்டி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ மானாமதுரை/ அலுவலத்தில் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டிருந்தேன். பதிவு எண்.**98/98–99**, dt. **13.10.98.** அதன் அடிப்படையில் எனக்கு இரண்டு லட்சம் திட்டத்தில் மின் இணைப்பு பெற்றுக்கொள்ள கடிதம் வந்தது. அந்நேரம் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தேன். மேலும், பதிவு செய்த சர்வே எண்.**154/4**ஏ உள்ள கிணற்றில் தண்ணீர் ஊற்று குறைந்து விட்டபடியால் எனக்கு சொந்தமான **154/5**ல் ஒரு ஆழ்குழாய் கிணறு உள்ளது. அவ்விடத்திற்கு சர்வே மாற்றம் செய்து தரும்படி மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அதற்குண்டான வருவாய் ஆவணங்கள் இத்துடன் இணைத்துள்ளேன்.*

*இப்படிக்கு*
*உண்மையுள்ள*
*Sd/xxxx K. மாசானம்"*

**11.3** பத்தி **10.2** ல் உள்ள தீர்வுகளின் படி இந்தச் சலுகையை (concession) தவறாக பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காக அந்த பகுதி உதவி கோட்ட பொறியாளரால் விசாரிக்கப்பட்டு புதிய கிணறும், நீர் பயன்படுத்தப்படும் நிலங்களும், நுகர்வோருக்கே சொந்தம் என்பதையும், நுகர்வோரின் கோரிக்கை உண்மையான காரணங்களுக்காகத்தான் (bonafide reasons) என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் உதவி கோட்ட பொறியாளரின் அறிக்கை அந்தக் கோப்பில் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்று புல எண் மாற்றம் செய்யும்போது ஏற்கனவே மேல்முறையீட்டாளரின் தயார் நிலை பதிவு செய்ய காலநீட்டிப்பு கோரிய விண்ணபத்தின் அடிப்படையில் **05.05.2012** அன்று உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர்களால் கள ஆய்வு செய்த அறிக்கையின்பேரில் **23.07.2012** அன்று செயற்பொறியாளரால் புல எண் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நான் செயற்பொறியாளரின் கடித நாள்.**15.11.2011** மற்றும்

உதவி மற்றும் உதவி செயற் பொறியாளரின் கள ஆய்வு அறிக்கை மற்றும் அது சம்பந்தமாக ஆவணங்களை ஆராய விரும்புகிறேன். அவைகளின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**(1) செயற்பொறியாளரின் கடித நாள்.15.11.2011**

*செயற்பொறியாளர் அலுவலகம்*
*பகிர்மானம்,*
*மானாமதுரை*

---

*கு.ஆ.எண்.செபொ/மானா/தொநுஉ/கா.நீ.கள/அ.எண்.3649/நாள் 15.10.2011*

---

*பொருள்– மின்சாரம் – விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் பதிவு எண்.98/98–99 நாள் 13.10.98 தயார் நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு – கள ஆய்வு அறிக்கை வேண்டுவது – சம்பந்தமாக*

*பார்வை – திரு. க. மாசானம் அவர்களின் விண்ணப்ப நாள் 10.10.2011*

–––––

*திரு. க. மாசானம், த/பெ கருப்பையாசேர்வை T. வேலாங்குளம் கிராமம் அவர்கள் சர்வே எண்.154/4A–ல் உள்ள வட்ட கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டி விவசாய மின் இணைப்புக்கான விண்ணப்பத்தை இவ்வலுவலகத்தில் பதிவு செய்துள்ளார். பதிவு எண்.98/98–99 நாள் 13.10.98. மேலும், விண்ணப்பதாரருக்கு 2 லட்சம் சிறப்பு திட்டத்தில் தயார் நிலை பதிவு கடிதம் 3/11/2010 அன்று அனுப்பப்பட்டது. அவர் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் உரிய கால அவகாசத்திற்குள் தயார்நிலை பதிவு செய்ய இயலவில்லை என்றும் தற்போது கால நீட்டிப்பு கேட்டு பார்வையின் வாயிலாக கடிதம் அளித்துள்ளார்.*

*எனவே, சர்வே எண்.154/4A –ல் உள்ள வட்டக் கிணற்றில் போதுமான அளவு நீர் ஊற்று உள்ளதா கிணறு ஆற்றுப்படுகையிலிருந்து 200 மீட்டர் தள்ளி அமைந்துள்ளதா மற்றும் அதே சர்வே எண்ணில் Rs.25,000/–ம் திட்டத்தில் வேறு வட்ட கிணறுக்கு மின் இணைப்பு பெறப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என வாய் மொழியால் விண்ணப்பதாரர் தெரிவித்துள்ளார். அவ்வாறு அதே சர்வே எண்ணில் வேறு ஏதேனும் மின் இணைப்பு இருந்தால் அந்த விவசாய மின் இணைப்பு எந்த வரிசையில் பெறப்பட்டு உள்ளன. அதன் SC No மற்றும் தேதி ஆகியவற்றை தெளிவாக குறிப்பிடவும்*

*மேலும் அவ்வாறு மின்இணைப்பு பெறப்பட்டு இருந்தால் அந்த கிணறுக்கும் தற்போது மின் இணைப்பு வேண்டி கோரப்பட்ட கிணறுக்கும் உள்ள இடைவெளி தூரத்தை தெளிவாக குறிப்பிடவும் மற்றும் மின்இணைப்பு பெறப்பட்ட கிணறு இருப்பின் அதன் விவசாய விண்ணப்பம் பதிவு செய்த பதிவு எண் என்ன என்பதை தெளிவாக காட்டவும்.*

*மேலும், மேற்கண்ட பதிவு எண்.98/98–99க்கான அசல் விண்ணப்பம் திருப்பாச்சேத்தி பிரிவு அலுவலகத்தில் பெறப்பட்டு உள்ளதால் கள அய்வு ஆறிக்கையை சமர்ப்பிக்கும் பொழுது அந்த அசல் விண்ணபத்தையும் இணைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

மேற்படி கோப்பு மேற்பார்வை பொறியாளர் அவர்கள் அனுமதிக்கு அனுப்ப இருப்பதால் இக்குறிப்பாணை பெற்றுக்கொண்ட ஏழு தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒப்பம்/XXXXX
செயற்பொறியாளர்
பகிர்மானம்/மானாமதுரை

## (2) உதவி பொறியாளரின் கள ஆய்வு அறிக்கை

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

| அனுப்புதல் | பெறுதல் |
|---|---|
| பொறி. மு. ராஜாமணி | உதவி செயற்பொறியாளர்/பகிர்மானம்<br>மானாமதுரை |

க.எண்.உ.பொ/ப/திருப்/கோ.விவ/அ.52/12 நாள் 05.05.12

அய்யா,

பொருள்— மின்சாரம்— விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவு எண்.98/98—99 நாள் 13.10.98 தயார் நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு – கள ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல்

பார்வை— கு.எண்.செபொ/ப/மானா/தொநுஉ/கா.நீ.கள/அஎண்.3649 நாள் 15.10.2011

——————

பார்வையின்பால் மீளப்பெறப்பட்ட கருத்துருவிற்கு கீழ்கண்ட விளக்கம் சமர்ப்பிக்கப்படுகிறது.

திரு. க. மாசானம், த/பெ கருப்பையாசேர்வை T. வேலாங்குளம் கிராமம் அவர்கள் சர்வே எண்.154/4A—ல் உள்ள வட்ட கிணற்றுக்கு விண்ணப்ப பதிவு எண்.98/98—99 நாள் 13.10.98க்கு விண்ணப்பத்தில் உள்ளபடி வட்டக்கிணறு போதுமான நீர்வளத்துடன் ஆற்றுப் படுகையிலிருந்து 200 மீ தள்ளி அமைந்துள்ளது. அதே சர்வே எண்ணில் சிறப்பு முன்னுரிமைத்திட்டம் — ரூ.10,000/— வேறு கிணற்றுக்கு வேறு விண்ணப்பத்தின் அடிப்படையில் மின்இணைப்பு எண்.169 நாள் 7.3.97 வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்.154/4ஏல் இரண்டு வட்டக் கிணறுகள் உள்ளன. இதில் ஒன்றில் மின்இணைப்பு உள்ளது. தற்போது மின்இணைப்புக் கோரும் கிணற்றுக்கும் ஏற்கனவே மின்இணைப்பு உள்ள கிணற்றுக்கும் சுமார் 70 மீ இடைவெளி உள்ளது. அசல் விண்ணப்ப பதிவு எண்.98/98—99 உடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ளள கிணற்றுக்கு மின்இணைப்பு இல்லை. ஆகவே, மேற்படி விண்ணப்பம் கால நீட்டிப்பிற்கு பரிந்துரை செய்து சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒப்பம்/xxxxxxx
Assistant Engineer

## (3) உதவி செயற் பொறியாளரின் கள ஆய்வு அறிக்கை

கள ஆய்வு அறிக்கை

திரு. க. மாசானம், த/பெ கருப்பையா சேர்வை 2 லட்சம் சிறப்பு முன்னுரிமை திட்டம், விண்ணப்ப பதிவு எண்.98/1998—99 நாள் 13.10.1998, T. வேலாண்குளம் கிராமம், சர்வே எண்.154/4ஏ—ல் உள்ள வட்டக்கிணறு என்னால் ————12 நாளன்று ஆய்வு செய்யப்பட்டது.

மேற்கூறிய சர்வே எண்.154/4ஏ–ல் உள்ள வட்ட கிணற்றில் போதுமான அளவு தண்ணீர் உள்ளது. ஆற்றுப்படுகையில் இருந்து 200 மீட்டர் தள்ளி அமைந்துள்ளது.

இதே சர்வே எண்.154/4ஏ–ல் உள்ள மற்றொரு வட்டக் கிணற்றிற்கு சுயநிதித்திட்டம் ரூ.10000/–ன் அடிப்படையில் மின் எண்.169 நாள் 7.3.1997 அன்று வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்.154/––ல் இரண்டு வட்டக் கிணறுகள் உள்ளன.

சர்வே எண்.154/4ஏ–ல் ஏற்கனவே மின் இணைப்பு கொடுத்த வட்டகிணற்றிற்கும் தற்போது மின்இணைப்பு கேட்டுள்ள வட்ட கிணற்றிற்கும் 70 மீட்டர் தூரம் இடைவெளி உள்ளது.

விண்ணப்ப எண்.98/1998–99 நாள் 13.10.98 ல் குறிப்பிட்டுள்ள கிணற்றிற்கு மின்இணைப்பு கிடையாது என்று சான்றிளித்து கால நீட்டிப்பிற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

ஒப்பம்/xxxxxxx
உதவி செயற் பொறியாளர்/ பகிர்வு
தமிழ்நாடு மின்சார வாரியம்
மானாமதுரை–623 506

## (4) செயற் பொறியாளரின் புல எண் மாற்றத்திற்கான அனுமதி

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
செயற்பொறியாளர் அலுவலகம்
பகிர்மானம்,
மானாமதுரை

---

கு.ஆ.எண்.செபொ/மானா/தொநுஉ/கோ.வி/அ.எண்.3381/நாள் 23.7.2012

---

பொருள்– மின்சாரம் – சி.மி.ப.வ. – விவசாய மின்இணைப்பு கோரும்
விண்ணப்பம் அசல் விண்ணப்பத்தில் மாற்றம் கோருவது
அனுமதி அளித்தல் – தொடர்பாக

பார்வை – (1) க.ஆ.எண்.உ.செ.பொ/ப/ /வ.அ/கோ.வி/அ.எண். / நாள்
(2) விண்ணப்பதாரர் விண்ணப்ப நாள் 12.7.2012

–––––

விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் பதிவு எண். 98/98–99 நாள் 13.10.98 ன் படி பதிவு செய்யப்பட்டு தற்போது சுயநிதித் திட்டம் சாதாரண வரிசை மின் இணைப்புக்காக அதில் மாற்றம் செய்யும் விண்ணப்பம் பார்வையின்படி பெறப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள வருவாய் ஆவணங்களின் அடிப்படையிலும் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தின் அடிப்படையிலும் கீழ்கண்டவாறு மாற்றம் செய்து அனுமதி அளிக்கப்படுகிறது.

| விவரம் | அசல் விண்ணப்ப விவரம் | | தேவைப்படும் மாற்றம் |
|---|---|---|---|
| பெயர் | : க. மாசானம் | : | க. மாசானம் |
| தந்தை/கணவர்: பெயர் | : கருப்பையா சேர்வை | : | கருப்பையா சேர்வை |
| சர்வே எண். | : 154/4–A | : | 154/5 |
| வருவாய் கிராமம் | : T. வேலாங்களம் | : | T. வேளாங்களம் |

*திறன்* : *5* HP : *5* HP

*காரணம்* : *சர்வே எண்.154/4*A*ல் உள்ள கிணற்றில் போதுமான நீர் ஆதாரம் இல்லாததால் விண்ணப்பதாரர் வேண்டுகோளுக்கிணங்க உரிய வருவாய் ஆவணம் பெற்று சர்வே எண் மாற்றம் செய்யப்படுகிறது.*

*ஒப்பம்/xxxxx*
*செயற்பொறியாளர்*
*பகிர்மானம்/மானாமதுரை*

**11.4** செயற்பொறியாளரின் **15.10.2011** நாளிட்ட கடிதத்தின் இரண்டாவது பத்தியில் சர்வே எண்.**154/4A–ல்** உள்ள வட்டக் கிணறில் போதுமான அளவு நீர் ஊற்று உள்ளதா, கிணறு ஆற்றுப்படுகையிலிருந்து **200** மீட்டர் தள்ளி அமைந்துள்ளதா என்றும் மற்றும் அதே சர்வே எண்ணில் Rs.**25,000/–ம்** திட்டத்தில் வேறு வட்ட கிணறுக்கு மின் இணைப்பு பெறப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என வாய் மொழியாக விண்ணப்பதாரர் தெரிவித்துள்ளதாகவும் உள்ளது. அவ்வாறு அதே சர்வே எண்ணில் வேறு ஏதேனும் மின் இணைப்பு இருந்தால் அந்த விவசாய மின் இணைப்பு எந்த வரிசையில் பெறப்பட்டு உள்ளன. அதன் Service Connection No மற்றும் தேதி ஆகியவற்றை தெளிவாக குறிப்பிடவும் என்றும் கோரப்பட்டுள்ளது. மேலும் இது சம்பந்தமாக **09.11.2011** மற்றும் **17.12.2011** ஆகிய தேதிகளில் உதவி செயற் பொறியாளர் /பகிர்மானம்/ மானாமதுரை அவர்களுக்கு நினைவூட்டு கடிதம் செயற்பொறியாளரால் அனுப்பப்பட்டபிறகு **05.05.2012** அன்று கள ஆய்வு செய்யப்பட்டு கள ஆய்வு அறிக்கை அனுப்பபட்டுள்ளது.

**11.5** உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளரின் கள ஆய்வு அறிக்கையில் சர்வே எண்.**154/4A** ஆய்வு செய்யப்பட்டதாகவும் விண்ணப்ப பதிவு எண்.**98/98–99** நாள் **13.10.98** அன்று பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பத்தில் உள்ளபடி வட்டக்கிணறு போதுமான நீர்வளத்துடன் ஆற்றுப் படுகையிலிருந்து **200** மீட்டர் தள்ளி அமைந்துள்ளதாகவும், அதே சர்வே எண்ணில் சிறப்பு முன்னுரிமைத்திட்டம் – ரூ.**10,000/–** கீழ் வேறு கிணற்றுக்கு வேறு விண்ணப்பத்தின் அடிப்படையில் மின்இணைப்பு எண்.**169**, **7.3.97** நாளன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**11.6** **05.05.2012** அன்று உதவி பொறியாளர் அவர்களாலும் அதன் பிறகு உதவி செயற் பொறியாளர் அவர்களாலும் செய்யப்பட்ட கள ஆய்வின் படி விண்ணப்ப பதிவு எண்.**98/98–99** நாள் **13.10.98** அன்று பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பத்தில் உள்ளபடி வட்டக்கிணற்றில் போதுமான நீர் ஆதாரம் உள்ளது என்பதை அறிய முடிகிறது. ஆனால் செயற்பொறியாளரின் **27.07.12** நாளிட்ட புல எண் மாற்ற ஆணையில் சர்வே எண்.**154/4A**ல் உள்ள கிணற்றில் போதுமான நீர் ஆதாரம்

இல்லாததால் விண்ணப்பதாரர் வேண்டுகோளுக்கிணங்க உரிய வருவாய் ஆவணம் பெற்று சர்வே எண் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**11.7** பத்தி **10.2** ல் உள்ள தீர்வுகளின் படி இந்தச் சலுகையை (concession) தவறாக பயன்படுத்துவதை தடுத்து நுகர்வோரின் கோரிக்கை உண்மையான காரணங்களுக்காகத்தான் (bonafide reasons) என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும், உதவி கோட்ட பொறியாளரின் அறிக்கை அந்தக் கோப்பில் இடம் பெற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் செயற்பொறியாளரின் புல எண் மாற்ற ஆணையானது உதவி மற்றும் உதவி செயற் பொறியாளர்களின் கள ஆய்வு அறிக்கையில் சர்வே எண்.154/4Aல் உள்ள கிணற்றில் போதுமான நீர் ஆதாரம் உள்ளது என்ற உண்மையை புறந்தள்ளிவிட்டு புல எண் மாற்றம் வழங்கியுள்ளது எடுத்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல என்றே கருதவேண்டியுள்ளது.

**11.8** செயற்பொறியாளரின் **03.11.2010** தேதியிட்ட கடிதத்தில் திரு மாசானம் அவர்களின் புல எண்.154/4Aல் **13.10.1998** அன்று பதிவு செய்யப்பட்ட வேளாண் மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தின்பேரில் தயார் நிலை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் **20.11.2010** தேதிக்குள் உரிய ஆவணங்களை பிரிவு அலுவலரிடம் சமர்ப்பித்து அவரது ஒப்புதலை பெற்றபின் **03.12.2010** தேதிக்குள் தயார் நிலையினைப் பதிவு செய்து கொள்ளுமாறும் கோரப்பட்டிருந்தது. ஆனால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி மேல்முறையீட்டாளர் பல முறை கால அவகாசம் பெற்று புல எண்.154/4A–லிருந்து புல எண்.154/5 என்ற எண்ணிற்கு புல எண் மாற்றம் செய்தபிறகு **17.08.2012** அன்றுதான் தயார்நிலை பதிவுசெய்துள்ளார்.

**11.9** இதுசம்பந்தமாக சமர்பிக்கப்பட்ட வருவாய்த்துறை ஆவணங்களில் புல எண்.154/5 ஆனது திரு.க. இருளப்பன் என்பவருக்கு சொந்தமானது என்று கிராம நிர்வாக அலுவலர் **20.09.1998** அன்று, அதாவது மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் பதிவு செய்யும் போது வழங்கப்பட்ட ஆவணத்தில் சான்றளித்துள்ளார். அதன்பிறகு மேல்முறையீட்டாளர் காலநீட்டிப்பு கோரிய **10.10.2011** கடிதத்துடன் சமர்பித்த ஆவணத்தின்படி புல எண்.154/5 ஆனது திரு.மா. சுப்பிரமணி என்பவருக்கு சொந்தமானது என்று சான்றளித்துள்ளார். அதன்பிறகு மேல்முறையீட்டாளர் புல எண் மாற்றம் கோரிய **12.07.2012** கடிதத்துடன் சமர்பித்த ஆவணங்களில் தான் புல எண்.154/5 ஆனது திரு.க. மாசாணம் அவர்களுக்கு சொந்தமானது என்று சான்றளித்துள்ளார்.

**11.10** இதன்மூலம் அறியப்படுவது உரிமதாரரின் தயார்நிலை பதிவு கோரிய **03.11.2010** தேதியில் புல எண்.**154/5** ஆனது மேல்முறையீட்டாளருக்கு சொந்தமானதல்ல என்று தெரியவருகிறது. **03.11.2010** ற்கு பிறகே மேல்முறையீட்டாளர் புல எண்.**154/5**—ஐ கிரையம் பெற்று அதன்பிறகே புல எண் மாற்றம் பெற்றுள்ளதையும் இங்கு கருத்தில்கொள்ளவேண்டியுள்ளது.

**11.11** பத்தி **11.7** முதல் **11.10** வரை உள்ள தீர்வுகளின் அடிப்படையில் செயற்பொறியாளர் / பகிர்மானம் / மானாமதுரை அவர்கள் புல எண்.**154/4A**ல் உள்ள வட்டக்கிணற்றிலிருந்து புல எண்.**154/5** ல் உள்ள ஆழ்துழாய் கிணற்றுக்கு புல எண் மாற்றம் வழங்கிய **27.07.2012** நாளிட்ட ஆணை விதிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12. வழக்கெழுவினா 3—ற்கான தீர்வு—**

**12.1** பத்தி **11**—ல் உள்ள தீர்வுகளின் படி புல எண்.**154/4A**ல் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட **13.10.1998** நாளிற்கு முன்பே மேல்முறையீட்டாளருக்கு அதே புல எண்ணில் மின் இணைப்பு எண்.**169** ஆனது **07.03.1997** அன்று வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. ஒரு நுகர்வோருக்கு ஒரே புல எண்ணில் ஒன்றிற்கு மேற்பட்ட விவசாய மின் இணைப்பு வழங்க வழிவகையுள்ளதா என்று அறிய தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி **27(13)** மற்றும் **29(2)**ஆகியவற்றை ஆராய வேண்டும். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"27. Requisitions for Supply of Energy:*
*xxxx*

*(13) Within a door number or sub door number, an establishment or person will not be given more than one service connection.*
*xxxx*

*29. Service Lines :*
*xxxx*

*(2) In agricultural connections where the consumer requires a separate service connection for utilizing energy for radios and other appliances including domestic lighting in the farm house, more than one service connection in the same Survey Field Number /sub-divided survey field number will be permitted.*

*xxxx*

12.2 தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(13)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, ஒரு கதவிலக்கம் அல்லது துணை கதவிலக்கத்தில் உள்ள ஒருவருக்கு ஒரு மின்இணைப்பிற்கு மேல் கொடுக்க முடியாது என்று தெரிகிறது.

12.3 தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 29(2)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது பண்ணை வீட்டில் வானொலி, வீட்டிற்கு வெளிச்சம் மற்றும் வீட்டிற்கான மற்ற பயன்பாட்டிற்காகவும் தனி மின்னிணைப்பு வேண்டும் என்று நுகர்வோருக்கு தேவைப்பட்டால் விவசாய மின்இணைப்பு தவிர மேலும் ஒரு மின்இணைப்பு ஒரு புல எண்/துணை புல எண்ணில் வழங்கலாம் என்று தெரிகிறது. ஆகவே, ஒரு புல எண்ணில் ஒரு விவசாய மின் இணைப்புதான் வழங்க முடியும் என்று தெரிகிறது.

12.4 இந்த வழக்கில் புல எண்.154/4Aல் மேல்முறையீட்டாளருக்கு 07.03.1997 அன்று விவசாய மின்இணைப்பு எண்.169 வழங்கப்பட்டுள்ளது. புல எண். 154/4Aல் உள்ள விவசாய மின்இணைப்பு எண்.169 பயன்பாட்டில் உள்ளபோதே மேல்முறையீட்டாளர் இரண்டாவதாக ஒரு விவசாய மின் இணைப்பு கோரி 13.10.1998 அன்று எதிர்மனுதாரரின் அலுவலத்தில் விண்ணப்பித்திருக்கிறார். எனவே, பத்தி 12.2 மற்றும் 12.3 உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளின் 13.10.1998 நாளிட்ட விண்ணப்பமானது விண்ணப்ப நிலையிலேயே தகுதியிழந்த ஒன்றாக கருதப்பட வேண்டியதாகும்.

12.5 மின்சார வாரிய நடைமுறைகளின்படி ஒரு விவசாய விண்ணப்பம் பதிவு செய்யும் போது சம்பந்தப்பட்ட அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று தெரிகிறது. அவ்வாறு கள ஆய்வு விண்ணப்பம் பதிவு செய்த அன்றே செய்திருந்தால் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரிய புல எண்ணில் ஏற்கனேவே பயன்பாட்டிலிருந்த மின் இணைப்பு பற்றிய விபரம் அறிந்திருக்கலாம். அவ்வாறு கள ஆய்வு செய்யாமல் இரண்டாவதாக மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் பதிவு செய்த அலுவலரின் செயல் மிகுந்த வருத்ததிற்குரியது.

12.6 பத்தி 12.2, 12.3 மற்றம் 12.4 உள்ள தீர்வுகளின் அடிப்படையில் புல எண்.154/4Aல் விவசாய மின்இணைப்பு எண்.169 பயன்பாட்டில் உள்ளபோதே மேல்முறையீட்டாளர் இரண்டாவதாக ஒரு விவசாய மின் இணைப்பு கோரி 13.10.1998 அன்று பதிவு செய்த விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பமானது தமிழ்நாடு மின்பகிர்மான விதிகளுக்கு ஏற்புடையது அல்ல என்பதால்

மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் விண்ணப்பநிலையிலேயே தகுதியிழந்த ஒன்றாக கருதப்பட வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 13. <u>கவனிப்பாய்வு</u>

13.1 விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் பதிவு எண்.98/98–99 நாள் 18.10.98 கள ஆய்வு செய்யாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

13.2 செயற்பொறியாளரின் புல எண் மாற்ற ஆணையானது உதவி மற்றும் உதவி செயற்பொறியாளர்களின் கள ஆய்வு அறிக்கையில் சர்வே எண்.154/5A இல் உள்ள கிணற்றில் போதுமான நீர் ஆதாரம் உள்ளது என்ற உண்மையை புறந்தள்ளிவிட்டு புல எண் மாற்றம் வழங்கியுள்ளது விதிமுறைகளுக்கு புறம்பானது.

13.3 செயற்பொறியாளரின் 03.11.2010 தேதியிட்ட கடிதத்தில் திரு மாசானம் அவர்களின் புல எண்.154/4Aல் 13.10.1998 அன்று பதிவு செய்யப்பட்ட வேளாண் மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தின்பேரில் தயார் நிலை பதிவு செய்ய அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், உரிமதாரரின் தயார்நிலை பதிவு கோரிய 03.11.2010 தேதியில் புல எண்.154/5 ஆனது மேல்முறையீட்டாளருக்கு சொந்தமானதல்ல என்று தெரியவருகிறது. 03.11.2010 ற்கு பிறகே மேல்முறையீட்டாளர் புல எண்.154/5–ஐ கிரையம் பெற்று அதன்பிறகே புல எண் மாற்றம் பெற்றுள்ளதை சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின்மூலம் தெரியவருகிறது.

## 14. <u>முடிவுரை</u>

14.1 மேற்காணும் பத்தி 12–இன் படி புல எண். 154/4Aல் உள்ள விவசாய மின்இணைப்பு எண்.169 பயன்பாட்டில் உள்ளபோதே மேல்முறையீட்டாளர் இரண்டாவதாக ஒரு விவசாய மின் இணைப்பு கோரி 13.10.1998 நாளன்று பதிவு செய்த விண்ணப்பமானது தமிழ்நாடு மின் பகிர்மான விதிகளுக்கு ஏற்புடையது அல்ல என்பதால் மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் விண்ணப்பநிலையிலேயே தகுதியிழந்த ஒன்றாக கருதப்பட வேண்டும் என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

14.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.60/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. கா. மாசானம்,
த/பெ கருப்பையா,
101, மெயின் ரோடு,
திருப்பாச்சேத்தி, திருப்புவனம் தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.

2) செயற் பொறியாளர்/பகிர்மானம்/மானாமதுரை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
மானாமதுரை – 630 606.

3) உதவி செயற் பொறியாளர்/பகிர்மானம்/மானாமதுரை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
மானாமதுரை – 630 606.

4) உதவி பொறியாளர்/பகிர்மானம்,
திருப்பாசேத்தி,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருப்பாசேத்தி–630 610.

5) மேற்பார்வை பொறியாளர்,
சிவகங்கை பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவகங்கை கலெக்டர் அலுவலகம்,
சிவகங்கை – 623 562.

6) தலைவர்  & நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.